தடைபடா மின்சார விநியோகத்துக்காக 60மீ. ஆழத்தில் சுரங்கம்; 2018ல் தயார்

சிங்கப்பூரின் மிகவும் ஆழமான சுரங்கம் அடுத்த ஆண்டு ஜூலையில் கட்டி முடிக்கப்பட்டுவிடும். அந்தச் சுரங்கம் எதிர்காலத்தில் சிங்கப்பூருக்கு தேவைப்படும் மின்சாரம் தடையின்றி கிடைக்க வகை செய்யும்.

சிங்கப்பூரின் மின்சாரத் தேவை வருங்காலத்தில் கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தேவையை செவ்வனே பூர்த்தி செய்வதற்காக 40 கி.மீ. நீளத்திற்குச் சுரங்கம் அமைக்கப்படுகிறது.

அந்தச் சுரங்கத்தில் குறைந்த பட்சம் 1,200 கி.மீ. நீளத்திற்கு உயர்அழுத்த மின்கம்பிகள் வேயப்படும். இந்தக் கம்பிகளின் நீளம், சிங்கப்பூருக்கும் கோலாலம்பூருக்கும் இடைப்பட்ட தொலைவைப் போல மூன்று மடங்கிற்கும் அதிகமாகும் என்று எஸ்பி குழுமம் நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதிய சுரங்கப்பாதை பூமிக்குக் கீழே குறைந்தபட்சம் 60மீ. ஆழத்தில் அமைக்கப்படுகிறது. $2.4 பில்லியன் செலவில் உருவாகி வரும் இந்தச் சுரங்கப்பாதை 20 மாடி வீவக புளோக் அளவுக்கு ஆழமானது. இது 120 ஆண்டுகளுக்குச் சேவையாற்றக் கூடியது.



படம்: சாவ் பாவ்

சிங்கப்பூரின் ஆக ஆழமான இந்தச் சுரங்கப்பாதைப் பணி 2012ல் தொடங்கியது. சுரங்கத்தில் அமைக்கப்படும் உயர்அழுத்த மின்கம்பிகள் நாட்டின் குறுக்கே வடக்கு, தெற்காக அல்லது கிழக்கு, மேற்காக இப்போது அமைக்கப்பட்டுள்ள எட்டு மின் இணைப்புகளுக்குப் பதிலாக இடம்பெறும் என்று எரிசக்தி பயனீட்டு நிறுவனமான எஸ்பி குழுமம் தெரிவித்தது.

மின்கம்பிகளைப் பொருத்தும் பணி 2022ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

40 கி.மீ. நீளத்திற்குச் சுரங்கம் அமைக்கப்படுகிறது. அந்தச் சுரங்கத்தில் குறைந்தபட்சம் 1,200 கி.மீ. நீளத்திற்கு உயர்அழுத்த மின்கம்பிகள் வேயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.